

## Guidelines for Submission of Papers / Authors Guide lines

- Authors can submit their full papers through an e-mail attachment to: nctalaconference2023@gmail.com
- The paper should not exceed 3000 words and it should contain an abstract of 100-250 words.
- The main title should be followed by name, affiliation and address of the author(s) with e-mail.
- The paper should be in MS-word format, font: Times New Roman, size: 12, space 1.5 lines, paper size: A4, keyword: 2-5 words, paper length: 3-5 pages
- Illustrations such as photographs, charts, graphs, drawings, and diagrams should be labelled, so that they correspond with their mention in the text (e.g. Table-1, Figure-2, Diagram-3).
- All references should be presented according to the APA Style
- Papers approved by the conference review committee will be accepted for the oral presentation

**Publication of Paper:**
All the accepted papers will be published in the conference proceedings with ISBN No.in the form of Hard copy.

**Important Dates**

| | |
|---|---|
| Last date for full paper submission | : 20-03-2023 |
| Acceptance of full paper | : 23-03-2023 |
| Last date for Author Registration | : 25-03-2023 |
| Conference Date | : 08-04-2023 |



**Registration fee:**
Library Professionals / Academicians - Rs.750/-
Students / Research Scholars - Rs.600/-

Registration fee covers Refreshment, Lunch, Conference Kit and Conference Proceedings

Registration Link:

Using the below link:
https://forms.gle/Tbq41k6bG3SuCLHF9

**Payment Mode:**
for Registration Payment can also be transferred online / NEFT below this link:

https://payments.billdesk.com/bdcollect/bd/natcoltm/191

### Organizing Committee

Chief Patron
**Shri.K.Raghunathan**
Secretary
National College (Autonomous)
Tiruchirappalli-620001

Patron
**Dr.K.Kumar**
Principal (i/c), National College (Autonomous)
Tiruchirappalli-620001

Organizing Secretary
**Dr.T.Sureshkumar**
Librarian, National College (Autonomous) Tiruchirappalli-620001
Mobile : **94438 36015**

Joint Organizing Secretaries
**Dr.A.Senthamil Selvi**
(Secretary-ALA) Librarian
Holy Cross College,(Autonomous)
Tiruchirappalli
**Dr.C. Shanthi**
Librarian, Saranathan College of Engineering
Tiruchirappalli
**Mrs.A.Radha Jeyalakshmi**
Asst. Librarian National College (Autonomous) Tiruchirappalli

# National College (Autonomous)

Nationally Re-accredited at 'A+' Grade by NAAC, College with Potential for Excellence
Tiruchirappalli - 620 001

One-day National Conference on

# "THE ROLE OF DIGITAL LIBRARY IN CONSTRUCTING THE DIGITAL WORLD"

**8th April-2023**

Venue :
National College(Autonomous)
Tiruchirappalli



Organized by
**Department of Library and Information Science**
**National College (Autonomous),**
**and**
**ALA- Academic Library Association,**
**Tamil Nadu.**




## About the College:

National College, Tiruchirappalli was founded in June, 1919. The founders conceived the idea of a National institution to promote among its youth the highest and the loftiest ideals which constitute the essence of Indian Culture and Nationalism. The College, in fact, had its origin to the National High School founded on the 11th of June 1886. The College functioned in the old Teppakulam campus for nearly four decades from 1919.

The shifting of the College campus from Teppakkulam to the Junction area began in 1959. The College celebrated its Golden Jubilee in the year 1969 and Platinum Jubilee in February 1995. The Vice President of India Shri. M. Venkaiah Naidu inaugurated the centenary celebrations of National College in glittering ceremony on the 10th of January 2020 The College introduced Co-Education pattern from the academic year 2007. The II shift classes were introduced from the year 2015-16. As on date, the college offers 19 PG Programmes and 20 UG Programmes. 13 Departments offer M.Phil. and Ph.D. Programmes. The College was first accredited by NAAC at "A"Grade in 2005 and Re-accredited in III cycle at "A+" Grade in 2016. The UGC, New Delhi, conferred "Autonomous" status on the college in 2010. The College has also been conferred the rare distinction of College with Potential for Excellence status in 2011. The Managing Agency of the college is Dr. V. Krishnamurthy Educational Foundation, a registered society. There are 300 teaching and 125 non-teaching staff working in the college. About 5200 students are studying in the college.

## About the Library (Resource Center):

The library of National College has a vibrant and long history. It started functioning on a modest scale in a class room, with just 470 books during the inception of the college in 1919. The Library, the Gate way to Knowledge, has been renamed as "Resource Center". Today the century old library boasts of a vast collection of books on a wide range of subjects. The massive collection of about 1,23,500 volumes including very rare texts is the pride of National College. In addition, the library provides access to 132 National as well as International journals in print as well as online. In tune with the changing times and technology, the library is fully automated and bar-coded for easy transaction. CCTV cameras are fixed at various points in the library. ID bar-coded Scanner gate register has been implemented in the library entrance. The library has WI-FI facility and web OPAC. In addition to the conventional sections such as Stacks, Reference, Circulation, Periodicals, Technical Section, Thesis and Dissertation, the building houses a large Audio Visual Theatre, spacious A/C Conference Hall, E-Library, Librarian Chamber and Office. In short, library is a communication centre backed by technology. The Digital Library has subscribed to DELNET and N-List for our library users.

## About the Conference

Central Library of National College (Autonomous), Tiruchirappalli is pleased to announce National Conference on The Role of Digital Library in Constructing the Digital World on 8th April 2023. Libraries of any type are confronting changes because of developments in ICT and its applications in libraries, changing user needs, data collection and the virtual platforms. Most of the services offered through electronic mode for which the libraries adopting digital technologies and implements latest technologies at a faster rate and the users' also preferring digital/virtual platform for accessing the resources. The library professionals need to equip their skills on digital technology and the vision of this conference is to enable the librarians to implement the latest technologies. In this connection, the theme of the conference is unique for managing the resources and disseminating the same to the users in the networked environment. The conference is designed in such a way that LIS community such as students, research scholars, LIS professionals and faculty members to discuss the most recent innovations, trends, and exchange their views and share their experience.

## Sub Themes of the Papers

### 1. Digital Libraries and System:

- Emerging Trends in Digital Libraries
- Knowledge Discovery and Representation in DL
- Digital Library Standards and Policy
- Digital archiving and preservation
- AI / Machine Learning / Data mining for DLS
- Electronic Resources Management
- Green libraries

### 2. Digital Libraries: User and Social Media Services

- Web and Mobile Enabled Library Services, Social Media
- Open Source and Open Access
- Data Science (Contribution of Library Professional)
- Open Education Platforms & Resources- Swayam /
- MOOCS/MOODLE/VLE
- Analysing Social Media Networks
- Media and Society

**Target Groups**

Library and Information Science professionals, Librarians, Information Scientists, Knowledge Managers, Students & Scholars and other relevant field professionals

**Conference Guidelines**

Only registered Delegates can attend the Conference

Certificate of participation / presentation will be awarded to the participant only if he/she has registered by paying the prescribed fee and is present at the conference.

At least one author/co-author should be available to present the paper at the conference .

All the authors, including co-authors, in case, must register individually by paying the prescribed fee

Selected papers will be notified through email

Registered candidates cannot claim for a refund due to absence or withdrawal from the conference

## Organizing Committee

### Organizing Committee Members

**Dr.A.Abul Hussain,** Librarian, Jamal Mohamed College (Autonomous), Tiruchirappalli
**Dr.S.Arockiasamy,** Assistant., St. Joseph College, Tiruchirappalli
**Dr.M.Renukadevi,** Assistant Librarian, TANUVAS, Orathanadu
**Dr.A.Rosaline Mary,** Librarian, Kalai Kaveri, Tiruchirappalli
**Dr.Srinivasa,** Librarian, Govt. First Grade College, Mangalore, Karnadaka
**Dr.T.Rajathi,** Librarian, Ultra College of Arts and Science, Madurai
**Mr.M.Murugan,** Librarian, Lawrence School, Ooty
**Mr.G.Sivaraman,** Sr. Asst. Librarian, Saranathan Engineering College, Tiruchirappalli
**Mr.Prasantha,** Assistant Librarian, NAAC, Bangalore
**Mrs.D.Priyadharisini,** Library Asst. St.Joseph College Trichy

### Conference Advisory Committee

**Dr.S.Srinivasa Ragavan,** (Founder of ALA), Professor & Head, Bharathidasan University, Tiruchirappalli
**Dr.M.Dorairajan** (Founder & President), Librarian, St. Joseph's College, Tiruchirappalli
**Dr.R.R.Saravanakumar ,** (President -ALA) Librarian , Sadakathullah Appa College, Tirunelveli
**Dr. Elavazhagan. K,** Librarian & Chief Knowledge Officer, IIM, Tiruchirappalli
**Dr.M.Surulinathi,** (Treasurer –ALA) Assistant Professor, Bharathidhasan University, Tiruchirappalli
**Dr.P.Ragavan.** Librarian (Rtd.) National College, Tiruchirappalli
**Dr.R.Jayabal** Librarian, SRMV College, Coimbatore
**Dr.C.Martin Arockiasamy,** Librarian, St. Xavier's College, Tirunelveli
**Dr.Chinnasamy,** Professor & Head, (Rtd.) Madurai Kamaraj University, Madurai
**Dr.K.Senthilnayagam,** Chief Librarian, Veltech R & D Deemed to be University, Chennai
**Dr. Radhakrishnan,** Professor, DLIS, Periyar University, Salem
**Dr. P. Ganesan,** Librarian, Alagappa University, Karaikudi
**Dr.S.A.Sampathkumar,** Librarian, Thiruppanandal
**Dr.M.Sankar,** Deputy Librarian, TNAU, Thiruvannamalai.
**Dr.K.Sridhar,** (Vice-President) Librarian, Hindu College, Chennai
**Dr.S.Aravind,** (Vice-President) Librarian, G.T.N. College, Dindigul
**Dr.M.Prabakaran,** (Joint Secretary - ALA)Librarian, Vivekananda College, Madurai
**Dr.M.Kannan,** (Joint Secretary- ALA) Librarian, V.O.C. College, Tuticorin Treasurer
**Dr.P.Perumal,** Librarian (Rtd.), Saraswathi Mahal Library, Thanjavore
**Dr.J.Franklin,** Head & Asst.Prof. Dept. of LIS, Bishop Heber College, Tiruchirappalli-17
**Dr.S.Lakshmi,** Head & Asst.Prof. Dept. of LIS, Srimad Andavan Arts & Science College, Srirangam, Trichy
**Dr.Navasakthi,** Librarian, Dinamalar, Tiruchirappalli
**Dr.Fazlur Rahman,** Librarian, Sri Krishna College of Engineering & Tech
**Dr.N.Seeni Mohammed,** Librarian, Jamal Md College of Management, Tiruchirappalli.
**Dr.S.Antony Arockiavathy,** Librarian, Christopher College of Arts & Sc., Nanguneri
**Dr.M.Fathima Beevi,** Head, DLIS, Sadakathullah Appa College, Tirunelveli

### Library Committee Members:

**Dr.R.Elavarasu,** Vice Principal & Head of the English Department, NCT, Trichy
**Dr.D.Saravanan,** Asst. Prof. Dept. of Chemistry, NCT, Trichy
**Dr.S.Neelagandan,** Asst. Prof. Dept of Tamil, NCT, Trichy
**Dr.K.Bhuvaneshwari,** Asst. Prof. Dept. of Tamil, NCT, Trichy.

## ACADEMIC LIBRARY ASSOCIATION (ALA)

(Reg. No. 109/2015)
255/10 RAJIV NAGAR, MADURAI ROAD,
MANAPPARAI. TIRUCHIRAPPALLI 621306

### ABOUT ALA

Academic Library Association (ALA) was established in the year 2015. The association was started for the Library professionals to help them to enhance their knowledge and skills and also to sort out their problems as and when reported. ALA instituted awards for the Ph.D holders, NET/SET Qualified persons in Library and Information Science, best paper presenters and for the library professionals. ALA is publishing IALA Journal in the areas of Library and Information Services including Best Practices

### The ALA is functioning with the following objectives

- To work for the overall development of profession of Librarianship in the country
- To formulate and promote high quality standards, norms and guidelines in establishing and maintaining excellent Academic Libraries in the country
- To provide a common forum to all the Library and Information Science professionals by holding Conferences, Seminars, Workshops, Training Programs , UGC NET/SET coaching programs and other Continuing Professional Development (CPD) initiatives
- To encourage and promote research in Academic Librarianship by carrying out/sponsoring research projects and to publish professionals Journals, Newsletters, Folders etc

## PROGRAMME

**Inauguration (10.00 am to 11.15 am)**

| | |
|---|---|
| Prayer | - College song followed by Tamilthai Valzhthu |
| Welcome Address | - Dr. T. Suresh Kumar, Librarian, NCT |
| Presidential Address | - Dr. K. Kumar, Principal(i/c), NCT |
| Honoring the Chief Guest | - Shri. K. Raghunathan, Secretary, NCT |
| Inaugural Address | - Dr. V. Thiruvalluvan<br>Vice-Chancellor, Tamil University |
| Keynote Address | - Dr. S. Srinivasa Ragavan, COE<br>Professor and HOD, Department of Library & Information Science, Bharathidasan University, Trichy |
| Vote of Thanks | - Dr. R.R. Saravanakumar, ALA-President |
| National Anthem | |

**Felicitation Programme**
(11.30am to 01.00 pm)
to Dr. M. Dorairajan, Librarian
St.Joseph's College (Autonomous)
Tiruchirappalli

**Paper Presentation (2.00 pm to 3.15 pm)**

**Valedictory (3.30pm to 4.15 pm)**

| | |
|---|---|
| Welcome Address | - Dr. A. Senthamil Selvi, ALA-Secretary |
| Valedictory Address & Certificate Distribution | - Dr. D.E. Benet, Vice Principal, NCT |
| Vote of Thanks | - Dr. T. Sureshkumar, Librarian, NCT |
| National Anthem | |

# National College(Autonomous)

Nationally Re-accredited at 'A+' Grade by NAAC, College with Potential for Excellence
Tiruchirappalli - 620 001

&

ALA: Academic Library Association
Tamil Nadu

## One-day National Conference on

# "THE ROLE OF DIGITAL LIBRARY IN CONSTRUCTING THE DIGITAL WORLD"

**8th April-2023**

Venue :
National College(Autonomous)
Tiruchirappalli





**Dr.V.THIRUVALLUVAN**
**Vice-Chancellor**
**Tamil University**
**Thanjavur-613 010**
**Tamilnadu, India**

# National College (Autonomous)

Nationally Re-accredited at 'A+' Grade by NAAC, College with Potential for Excellence
Tiruchirappalli - 620 001

&

**ALA: Academic Library Association**
**Tamil Nadu**

**Solicit the pleasure of your presence at the**

## One-day National Conference on

## "The Role of Digital Library in Constructing the Digital World"

**to be held on Saturday,**
**the 08th April, 2023**
**at 10.00 am**
**in the College A/c Seminar Hall**

**Dr.V.THIRUVALLUVAN**
**Vice-Chancellor**
**Tamil University, Thanjavur**

**Has graciously consented to deliver the Inaugural address**



# இன்றைய நிகழ்ச்சி

இந்து தமிழ் திசை 4 TRICHY
சனி, ஏப்ரல் 8, 2023

■ தேசிய கருத்தரங்கு: தேசிய கல்லூரி, டிஜிட்டல் உலகை கட்டமைப்பதில் டிஜிட்டல் நூலகத்தின் பங்கு என்ற தலைப்பில் உரை- தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் வி.திருவள்ளுவன், கல்லூரி வளாகம், காலை 10.

தினமலர் | திருச்சி | 8.4.2023 | 9

**கருத்தரங்கம்:** தேசிய கல்லூரி, கருமண்டபம், திருச்சி, காலை 10 மணி, தலைப்பு: டிஜிட்டல் உலகத்தை உருவாக்குவதில் டிஜிட்டல் நூலகத்தின் பங்கு, பேசுபவர்: தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக துணை வேந்தர் திருவள்ளுவன்.

2 தினமணி திருச்சி
சனிக்கிழமை, 8 ஏப்ரல் 2023

தேசியக் கல்லூரி, தமிழ்நாடு நூலக சங்கம் அகாதெமி: டிஜிட்டல் நூலகம் குறித்த தேசிய கருத்தரங்கம், பங்கேற்பு - தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் வி. திருவள்ளுவன், கல்லூரி வளாகம், காலை 10.

ENGAGEMENT
THE NEW INDIAN EXPRESS
SATURDAY 08.04.2023

■ One-day national conference on the role of digital library in constructing the digital world, National College Seminar Hall, 5:30 PM.

THE HINDU
Saturday, April 8, 2023 4
TIRUCHIRAPALLI

**National College:** Conference on Role of digital library in constructing the digital world, V.Thiruvalluvan, Vice Chancellor, Tamil University, inaugurates, 10 a.m.

மாலை மலர் திருச்சி 11—4—2023 ★★★



திருச்சி தேசியக்கல்லூரியில் நடைபெற்ற ஒருநாள் தேசிய கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களை படத்தில் காணலாம்.

## டிஜிட்டல் நூலகத்தின் பங்கு

# திருச்சி தேசிய கல்லூரியில் ஒருநாள் தேசிய கருத்தரங்கு

திருச்சி, ஏப்.11—

தமிழ்நாடு நூலக கல்விக்குழு, திருச்சி தேசியக்கல்லூரி நூலக துறை இணைந்து டிஜிட்டல் உலகத்தை கட்டமைப்பதில் டிஜிட்டல் நூலகத்தின் பங்கு என்ற தலைப்பில் ஒருநாள் தேசிய கருத்தரங்கை கல்லூரியில் நடத்தியது. கருத்தரங்க தொடக்க விழாவுக்கு திருச்சி தேசியக்க ல்லூரி நூலகர் முனைவர் டி.சுரேஷ்குமார் வரவே ற்றார். இவர் தேசியக்கல்லூரி நூலகத்தை டிஜிட்டல் மை யமாக்கு வதற்கான முயற்சி யை முன்னெடு த்தவர் ஆவார்.

நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் முனைவர் கே.குமார் தலைமை தாங்கினார். அப்போது அவர் பேசுகையில், தேசிய க்கல்லூரியில் தேசிய அளவிலான கருத்தரங்கு நடைபெ றுவது பொரு த்தமானது. மாணவர்கள் இந்த வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக்கொண்டார். முன்னதாக தொடக்க உரையாற்றிய தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வி.திருவள்ளுவன், முறை யாக பயன்படுத்தும்போது டிஜிட்டல் நூலகம் ஒரு வரப்பிரசாதம் என்றார்.

மாணவர்கள் எந்தவொரு நிகழ்வின் காட்சிபொருளாக மட்டுமின்றி நிகழ்வின் கருப்பொரு ளாக விளங்க வேண்டும். இது போன்ற கருத்தரங்கிலோ, வகுப்பறை யிலோ உங்கள் வாழ்க்கையை புரட்டி ப்போடும் ஒன்றை சொல் தந்துவிடும். அதற்காக காத்திருந்து உள்வாங்கி கொள்ள வேண்டும். நூல கத்துக்கு போகாத வர்கள் அறிஞர் ஆக முடியாது. வாசிப்பு என்பது சுவாசிப்பு போன்றது. உயிர் வாழ்வ தற்கு அது மிகவும் அவசியம் என்றார்.

நிகழ்ச்சியில் அண்ணா மலை பல்கலைக்கழக நூலக முனைவர் நாகராஜன், திருச்சி தேசியக்கல்லூரியின் முன்னாள் நூலகர் முனை வர் ராகவன், திருச்சி தூய வளனார் கல்லூரி நூலகர் முனைவர் எம்.துரைராஜன் ஆகியோருக்கு நூலக கல்விக்குழுவின் சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டது.

திருச்சி பாரதிதாசன் பல்க லைக்கழக தேர்வு நெறி யாளர் முனைவர் எஸ்.சீனி வாச ராகவன் வாழ்த்துரை வழங்கி பேசுகையில், நாளொரு மேனியும், பொழு தொரு வண்ணமுமாக நவீன தொழில்நுட்பம் வளர்ந்து வரும் வேளையில் நூலகத்தின் பயன்பாடும் டிஜிட்டல் மயமாவது அவசியம். அறிவுசார் தலைமுறை வீரியமிக்கதாக வளர்வதற்கு டிஜிட்டல் நூலகம் அவசியம் என்றார்.

நூலக கல்விக்குழும தலைவர் முனைவர் ஆர். ஆர்.சரவணக்குமார் நன்றி கூறினார். கருத்தரங்கில் கல்லூரி துணை முதல்வர் முனைவர் இளவரசு, முனைவர் பிரசன்ன பாலாஜி, துறை தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவ ர்கள் கலந்து கொண்டனர். தமிழ்த்துறை உதவி பேராசிரியர் முனைவர் கே.புவனேஸ்வரி தேசிய அளவிலான கருத்தரங்கின் நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார். இதில் கலந்து கொண்ட ஆய்வாளர்கள் தங்களது ஆய்வுக்கட்டு ரைகளை சமர்ப்பித்தனர்.



↑ திருச்சி தேசிய கல்லூரியில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கில், திருச்சி தூய வளனார் கல்லூரி நூலகர் துரைராஜனுக்கு விருது வழங்கிய தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் வி.திருவள்ளுவன்.

# டிஜிட்டல் நூலகம் குறித்த தேசிய கருத்தரங்கு

## தமிழ்ப் பல்கலை. துணைவேந்தர் பங்கேற்பு

● திருச்சி

தமிழ்நாடு நூலக கல்விக் குழு, திருச்சி தேசிய கல்லூரி நூலகத் துறை இணைந்து 'டிஜிட்டல் உலகைக் கட்டமைப்பதில் டிஜிட்டல் நூலகத்தின் பங்கு' என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கை கல்லூரி வளாகத்தில் நேற்று நடத்தின. கல்லூரி முதல்வர் கே.குமார் தலைமை வகித்தார்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக துணைவேந்தர் வி.திருவள்ளுவன் கருத்தரங்கை தொடங்கி வைத்துப் பேசியது:

முறையாக பயன்படுத்தும் போது டிஜிட்டல் நூலகம் ஒரு வரப் பிரசாதம். மாணவர்கள் ஒரு நிகழ்வின் காட்சிப் பொருளாக மட்டுமின்றி, நிகழ்வின் கருப்பொருளாக விளங்க வேண்டும். இது போன்ற கருத்தரங்கிலோ, வகுப்பறையிலோ உங்கள் வாழ்க்கையைப் புரட்டிப் போடும் ஒற்றைச் சொல் கிடைக்கும். அதற்காக காத்திருந்து, அதை உள்வாங்கிக்கொள்ள வேண்டும். நூலகத்துக்கு செல்லாதவர்கள் அறிஞராக முடியாது. வாசிப்பு சுவாசிப்பு போன்றது. உயிர் வாழ அவசியமானது. இவ்வாறு அவர் பேசினார்.

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக நூலகர் நாகராஜன், தேசியக் கல்லூரியின் முன்னாள் நூலகர் ராகவன், திருச்சி தூய வளனார் கல்லூரி நூலகர் எம்.துரைராஜன் ஆகியோருக்கு நூலகக் கல்விக் குழுவின் சிறப்பு விருது வழங்கப்பட்டது. திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக தேர்வு நெறியாளர் எஸ்.ஸ்ரீனிவாசராகவன் வாழ்த்திப் பேசினார். கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். கல்லூரி நூலகர் டி.சுரேஷ்குமார் வரவேற்றார். உதவி பேராசிரியர் கே.புவனேஸ்வரி தொகுத்து வழங்கினார். நூலக கல்விக் குழுமத் தலைவர் ஆர்.ஆர்.சரவணகுமார் நன்றி கூறினார்.

தஞ்சை மாலை முரசு-திருச்சி பதிப்பு

★★★ 9-4-2023 4



தேசியக்கல்லூரியில்

# ஒருநாள் தேசிய கருத்தரங்கு

திருச்சி, ஏப்.9–

தமிழ்நாடு நூலககல்விக்குழுவும், திருச்சி தேசிய கல்லூரி நூலகதுறையும் இணைந்து டிஜிட்டல் உலகத்தை கட்டமைப்பதில் டிஜிட்டல் நூலகத்தின்பங்கு என்னும் பொருளில் ஒருநாள் தேசிய கருத்தரங்கு நடைபெற்றது.

இத்தேசிய கருத்தரங்கின் தொடக்க விழாவில் தேசிய கல்லூரி நூலகர் சுரேஷ்குமார் நூலகர்களுக்கு விருது வழங்கி பேசினார். கருத்தரங்கில் தஞ்சை தமிழ் பல்கலைக்கழக துணை வேந்தர் திருவள்ளுவன் தொடக்க உரை ஆற்றினார்.

அண்ணாமலை பல்கலைகழக நூலக நாகராஜன்தேசியக்கல்லூரியின்மேனாள்நூலகர்முனைவர்ராகவன், திருச்சி தூயபலனார்கல்லூரிநூலகர் துரைராஜன் ஆகியோருக்கு நூலக கல்வி குழுவின் சிறப்பு விருது வழங்கப்பட்டது.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் தேர்வு நெறியாளர் எஸ் ஸ்ரீனிவாச ராகவன் வாழ்த்துறை வழங்கினர்.

முடிவில் நூலககல்வி குழும தலைவர் சரவணகுமார் நன்றி கூறினார். விழாவிற்கு கல்லூரியின் துணை முதல்வர் இளவரசு முனைவர் பிரசன்ன பாலாஜி, துறை தலைவர் பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# NATIONAL COLLEGE

**(Autonomous)**

**College with Potential for Excellence**

**Nationally Re-Accredited with 'A+' Grade by NAAC**

**TIRUCHIRAPALLI - 620 001**

DEPARTMENT OF LIBRARY AND INFORMATION SCIENCE

NATIONAL COLLEGE TRICHINOPOLY
Since 1919

*Cordially Invites you to the*

## CERTIFICATE DISTRIBUTION CEREMONY

**of the Internship Training of Librarianship**

**on 18th November 2023, 11.30 am.**




*Venue: AV Hall: [Resource Centre]*

**Certificate Distribution by**

## SHRI. K. RAGHUNATHAN

**Secretary**

National College (Autonomous)Tiruchirappalli-620001

Principal
**Dr.K.Kumar**

Librarian
**Dr.T.Sureshkumar**

# தேசியக் கல்லூரி நூலகத்துறை பயிற்சி பட்டறை நிறைவு விழா

தேசியக்கல்லூரியில் **18.11.2023** அன்று திருச்சி தேசியக்கல்லூரியின் நூலகவியல் துறையில் **"நூலக வேலைவாய்ப்புப் பயிற்சிப் பட்டறை நிறைவு விழா"** தொடங்கியது. திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் முதுநிலை நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறை முதலாம் ஆண்டு மாணாக்கர்கள் **8 பேர்** இப்பயிற்சிப் பட்டறையில் **14.11.2023 முதல் 18.11.2023** வரை ஏழு நாட்கள் பயிற்சி பெற்றனர். நூலக மேலாண்மை, நூலகப் பகுப்பாய்வு, நூலகசெயல்பாடு, புதியஉத்திகள் மற்றும் நூலக மென்பொருள் மேலாண்மை, மின் நூலகபயன்பாடு, மின்இதழ் பற்றிய பயன்பாடு குறித்து இப்பயிற்சியில் மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டது. இப்பயிற்சிப் பட்டறையின் நிறைவு விழா 18.11.2023 அன்று நடைபெற்றது. பயிற்சிப்பட்டறையின் **ஒருங்கிணைப்பாளர் மற்றும் நூலகவியல் துறைத்தலைவர் முனைவா த. சுரேஷ்குமார்** வரவேற்புரை வழங்கினார். **கல்லூரியின் செயலர் திரு.க.ரகுநாதன்** அவர்கள் பயிற்சிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி பாராட்டினார் மேலும் வளர்ந்து வரும் நூலகர்களாகிய நீங்கள் தற்பொழுது வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு தகுந்தார் போல் தங்களின் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். நம் தேசிய கல்லூரி நூலகத்தின் உள்ள நூல்கள், மின்-இதழ்கள், ஆராய்ச்சி கட்டுரைகள் போன்ற அனைத்து விதமான ஆவணங்களையும் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தங்கள் அலைபேசியின் வாயிலாகவே எப்பொழுது வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளும் தொழில்நுட்பம் செயல்பாட்டில் உள்ளது. இதை போன்று வருங்கால நூலகர்களாகிய நீங்கள் இக்காலத்திற்கு ஏற்றார் போல் தங்கள் தொழில்நுட்ப திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று பொருள்பட சிறப்புரையாற்றினார். கல்லூரியின் **முதல்வர் முனைவர் கி. குமார்** அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்று சிறப்புரை நிகழ்த்தினார். தட்டச்சு பயிற்சியாளர் **திருமதி.அன்புமணி நன்றியுரை** நல்கினார். பேராசிரியர்களும் நூலக உதவிநூலகர் திருமதி ராதாஜெயலெட்சுமி, நூலக உதவியாளர்கள் திரு லெட்சுமணன், திரு கலியமூர்த்தி, திருமதி உமா மகேஸ்வரி, திரு.ஹரிஹரன் மற்றும் உதவியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தினமணி 18:11:23 Page no:2

## இன்றைய நிகழ்ச்சிகள்

தேசிய கல்லூரி: நூலகர் பயிற்சி முடித்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் விழா, பங்கேற்பு - தேசிய கல்லூரி செயலர் கே. ரகுநாதன், கல்லூரி வளாகம், முற்பகல் 11.30.

இந்து தமிழ் திசை

நூலகத் துறையில் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் விழா: தேசிய கல்லூரி நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறை, சான்றிதழ் வழங்குபவர் – கல்லூரி செயலாளர் கே.ரகுநாதன், கல்லூரி வளாகம், முற்பகல் 11.30.

The Hindu

**National College:** Certificate distribution ceremony of librarianship internship training, 11.30 a.m.

தினமலர் | திருச்சி | 20.11.2023

# நூலக வேலைவாய்ப்பு பயிற்சி

**திருச்சி, நவ. 20–**

திருச்சி தேசிய கல்லூரி நூலகத்துறை சார்பில் நூலக வேலைவாய்ப்பு பயிற்சி முகாம் நடந்தது.

முகாமில் நூலக மேலாண்மை, செயல்பாடு, புதிய உத்திகள், பகுப்பாய்வு, மின் நூலக பயன்பாடு, மின் இதழ் ஆகியவை குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. நிறைவு விழாவுக்கு கல்லூரி முதல்வர் குமார் தலைமை வகித்தார்.

கல்லூரி செயலாளர் ரகுநாதன் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி பேசுகையில், ''வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் நூலகர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். புதிய தொழில்நுட்பத்தை ஏற்றுக் கொண்டு அதற்கேற்ற வகையில் திறமையை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்றார்.

நிகழ்ச்சியில் உதவி நூலகர் ராதாஜெயலட்சுமி, உதவியாளர்கள் லட்சுமணன், உமா மகேஸ்வரி உட்பட பலர் கலந்து கொண்டனர். துறைத் தலைவர் சுரேஷ் குமார் வரவேற்றார். தட்டச்சு பயிற்சியாளர் அன்புமணி நன்றி கூறினார்.

# National College (Autonomous)

Nationally Re-accredited at 'A+' Grade by NAAC, College with Potential for Excellence

Tiruchirappalli

# Department of Library and Information Science

## CENTRAL LIBRARY



**Chief Guest**



**Dr.S.Srinivasa Ragavan**

Controller of Examination (i/c), HOD of DLIS
Bharathidasan University, Tiruchirappalli-24

You are Cordially Invites for the

## CERTIFICATE DISTRIBUTION CEREMONY

For C.L.I.Sc., - 2022 Batch

**Date**

27th Sep 2023

**Time**

12.01 pm to 1.00 pm

**Venue**

Library Audio Visual Theatre

| Principal | Librarian | Secretary |
|---|---|---|
| Dr.K.Kumar | Dr.T.Sureshkumar | Shri.K.Raghunathan |



## தேசிய கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620 001

## சான்றிதழ் படிப்பிற்கான சான்றிதழ் வழங்கும் விழா-2023

திருச்சி தேசிய கல்லூரியில் இன்று (27.09.2023) நூலக மட்டும் தகவல் அறிவியல் துறை சார்பாக சான்றிதழ் படிப்பிற்கான சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது.

நூலக தகவல் அறிவியல் துறையின் ஆறு மாத சான்றிதழ் படிப்பு முடித்த 32 தேசிய கல்லூரி மாணவர்களுக்கு இன்று பாரதிதாசன் பல்கலைக்கழக தேர்வு நெறியாளர் முனைவர் எஸ் ஸ்ரீனிவாச ராகவன் அவர்கள் சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார்.

தேர்வு நெறியாளர் சிறப்புரை நிகழ்த்தும் பொழுது, சான்றிதழ் படிப்பு முடித்த நூலகவியல் மாணவர்களுக்கு நிறைய வேலை வாய்ப்புகள் இருப்பதை சுட்டிக்காட்டினார். ஆராய்ச்சி துறை, தொழில்நுட்பத்துறை, மாவட்ட பொது நூலகங்கள், கிராமப்புற நூலகங்கள், பள்ளி மற்றும் கல்லூரி நூலகங்களில் நூலக உதவியாளர்கள் மற்றும் நூலகர்களுக்கான வாய்ப்புகள் இருப்பதை சுட்டிக்காட்டினார். மேலும் ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணவர்கள் தங்கள் ஆராய்ச்சி படிப்பின் தரத்தை மேம்படுத்திக் கொள்ளவும் இந்த நூலகவியல் படிப்பு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை அவர் உரையில் சுட்டிக்காட்டினார்.

மேலும் சிறப்பு விருந்தினர் பாரதிதாசன் பல்கலைக்கழக தேர்வு நெறியாளர் முனைவர் ஸ்ரீனிவாச ராகவன் அவர்கள் பேசும் பொழுது மாணவர்கள் இதுபோன்ற சான்றிதழ் மற்றும் பட்டைய படிப்புகள் படிப்பதன் மூலம் அவர்கள் தங்களுடைய அறிவை வளர்த்துக் கொள்வதுடன் தங்களுடைய வேலை வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொள்வதுடன் தங்களுடைய தகுதியை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி செயலர் கா ரகுநாதன் அவர்கள் சான்றிதழ் பெற்ற மாணவர்களை பாராட்டினார். கல்லூரி முதல்வர் K. குமார் அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார். துணை முதல்வர்கள் முனைவர் பென்னட், முனைவர் இளவரசு மற்றும் முனைவர் பிரசன்ன பாலாஜி ஆகியோர் கலந்துகொண்டு பாராட்டு தெரிவித்தனர்.

கல்லூரி நூலகர் மற்றும் நூலக தகவல் அறிவியல் துறையின் ஒருங்கிணைப்பாளருமான த.சுரேஷ்குமார் அவர்கள் சிறப்பு விருந்தினரை அறிமுகப்படுத்தினார். நூலக அறிவியல் துறையின் மாணவர்கள் பாலமுருகன் அனைவரையும் வரவேற்றார், தர்மேஷ் விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியுரை நல்கினார்.

இவ்விழாவினை நூலக உதவி நூலகர் ராதா ஜெயலட்சுமி, நூலக உதவியாளர்கள் அன்புமணி, லட்சுமணன், கலியமூர்த்தி, உமா மகேஸ்வரி மற்றும் ஹரிஹரன் ஆகியோர் விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர் விழாவில் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இன்றைய நிகழ்ச்சிகள்

தினமலர்

**சான்றிதழ் வழங்கும் விழா:** தேசிய கல்லூரி, கருமண்டபம், திருச்சி, மதியம் 12 மணி, பங்கேற்பு: பாரதிதாசன் பல்கலைக்கழக, தேர்வுக் கட்டுப்பாளர் சீனிவாசன் ராகவன்.

து தமிழ் திசை 4 TRICHY
புதன், செப்டம்பர் 27, 2023

- நூலக அறிவியல் சான்றிதழ் படிப்பு முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா: தேசிய கல்லூரி, சான்றிதழ் வழங்குபவர்– பாரதிதாசன் பல்கலைக்கழக தேர்வு நெறியாளர் எஸ்.சீனிவாசராகவன், கல்லூரி வளாகம், பகல் 12.

தினமணி

புதன்கிழமை, 27 செப்டம்பர் 2023

தேசியக் கல்லூரி: நூலகத் துறை சார்பில், நூலகக் கல்வி பயின்றோருக்கு சான்றிதழ்கள் வழங்கும் விழா, கல்லூரி நூலக வளாகம், நண்பகல் 12.

தினமலர் திருச்சி 28.9.23 7

## கல்வி



திருச்சி தேசிய கல்லூரியில் நூலகத் துறை சார்பில் நடந்த நிகழ்ச்சியில் சான்றிதழ் மற்றும் பட்டய படிப்பிற்கான சான்றிதழ்களை பல்கலைக்கழக தேர்வு நெறியாளர் சீனிவாசராகவன் வழங்கினார்.

# சான்றிதழ் வழங்கும் விழா

திருச்சி: திருச்சி தேசிய கல்லூரி நூலக மற்றும் தக்வல் அறிவியல் துறை சார்பில் சான்றிதழ் மற்றும் பட்டய படிப்பிற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

கல்லூரி முதல்வர் குமார் தலைமை வகித்தார். நூலக தகவல் அறிவியல் துறையின் 6 மாத சான்றிதழ் படிப்பு முடித்த 32 மாணவர்களுக்கு பாரதிதாசன் பல்கலைக்கழக தேர்வு நெறியாளர் சீனிவாசராகவன் சான்றிதழ்கள் வழங்கி பேசுகையில்: சான்றிதழ் படிப்பு முடித்த நூலகவியல் மாணவர்களுக்கு ஏராள[illegible] வேலை வாய்ப்புகள் உள்ளன. [illegible]ஞ்சி துறை, தொழில்நுட்பத்துறை, மாவட்ட பொது நூலகங்கள், கிராமப்புற நூலகங்கள், பள்ளி, கல்லூரி நூலகங்களில் நூலக உதவியாளர்கள், நூலகர்கள் பணி வாய்ப்புகள் இருக்கிறது. மாணவர்கள் இதுபோன்ற சான்றிதழ் மற்றும் பட்டய படிப்புகள் படிப்பதால் அறிவை வளர்த்துக் கொள்வது டன் வேலை வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொள்வதுடன் தகுதியையும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும், என்றார்.

கல்லூரி செயலர் ரகுநாதன் சான்றிதழ் பெற்ற மாணவர்களை பாராட்டினார். துணை முதல்வர்கள் பென்னட்,இளவரசு, பிரசன்ன பாலாஜி, ஒருங்கிணைப்பாளர் சுரேஷ்குமார், ராதா ஜெயலட்சுமி உட்பட பலர் கலந்து கொண்டனர். மாணவர் பாலமுருகன் வரவேற்றார். தர்மேஷ் நன்றி கூறினார்.

DR V KRISHNAMURTHY
Educational Foundation
TIRUCHIRAPPALLI

# National College (Autonomous)

Nationally Re-accredited at 'A+' Grade by NAAC, College with Potential for Excellence
Tiruchirappalli

## Department of Library and Information Science
## Learning Resource Center

Cordially Invites you for the



# Library Day Celebration

Date & Time : 31st March, 2023 (Friday) at 11.30
Venue : Library - Audio Visual Theatre

## Dr. R. Raja

**Asst. Professor, Department of Tamil**
**National College**



has graciously consented to be the Chief Guest and delivers a special Talk on

# வாசிப்பு ஒரு வரம்

## Shri. K. Raghunathan

Secretary, National college(Autonomous)

**Distributes Prizes to the Best Library users**

Dr. K. Kumar
Principal

Dr.T.Sureshkumar
Organizer


National

# கல்லூரி நூலக தின விழா

## 31.03.2023

திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரியின் நூலக தின விழா 31.03.2023 அன்று முற்பகல் 11.30 மணிக்கு நூலக அரங்கில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் கி. குமார், தம் தலைமை உரையில் மாணவர்கள் நூலகத்தைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்துப் பேசினார். நூலகத்தின் ஆண்டறிக்கையை நூலகர் முனைவர் த. சுரேஷ் குமார் வாசித்து அளித்தார். ஒவ்வொரு துறையிலும் சிறப்பாக நூலகத்தைப் பயன்படுத்திய சுமார் 50 மாணவர்களுக்குக் கல்லூரியின் செயலர் திருமிகு கா. ரகுநாதன் பதக்கங்களையும் பரிசுகளையும் வழக்கிக் கௌரவப்படுத்தினார். கல்லூரி துணைமுதல்வர் முனைவர் இளவரசு வாழ்த்துரை வழங்கினார்.

இந்நிகழ்வில் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் இரா. இராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, 'வாசிப்பு ஒரு வரம்' என்னும் பொருண்மையில் உரையாற்றினார். அப்போது அவர், 'கல்வியின் பயன் வெறும் வேலைவாய்ப்பைப் பெறுவது மட்டுமே அல்ல; ஒட்டுமொத்த மனித குலத்திற்கும் நாட்டுக்கும் உதவும் நல்ல சிந்தனைகளை உருவாக்குவதே கல்வியின் ஆகப் பெரும்பயன்' என்றார். மேலும், நிலவும் சூழலில் இருந்து கற்றல், விருப்பத்துடன் கற்றல், கற்றலுக்கான வாய்ப்புகளைப் பெருக்கிக்கொள்ளுதல், கல்வியைச் சிந்தனையாக மாற்றிக்கொள்ளும் திறமை போன்றவற்றை விளக்கினார். இந்நிகழ்வில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ச. ஈஸ்வரன், பிற துறைப் பேராசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் பெருந்திரளாகப் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

முன்னதாக யுவஸ்ரீ மாணவர் வரவேற்புரை நல்க, ஹரிகிருஷ்ணன் மாணவர் நன்றி கூறினார். இந்நிகழ்வைக் கல்லூரி நூலகர் முனைவர் த. சுரேஷ் குமார் ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்தார்.

-----

தினமலர் | திருச்சி | 3.4.2023 | 9

# நூலக தின விழா

**திருச்சி:** திருச்சி தேசிய கல்லூரியில்நூலக தின விழா நடந்தது.கல்லூரி முதல்வர் குமார் தலைமை வகித்தார். தமிழ்த்துறை உதவி பேராசிரியர் ராஜா வாசிப்பு ஒரு வரம் என்ற தலைப்பில் பேசினார்.

நூலகங்களை சிறப்பாக பயன்படுத்திய 50 மாண வர்களுக்கு கல்லூரி செயலாளர் ரகுநாதன் பரிசு வழங் கினார். கல்லூரி நூலகர் சுரேஷ்குமார் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். மாணவி யுவஸ்ரீ வரவேற்றார். மாணவர் ஹரிகிருஷ்ணன் நன்றி கூறினார்.

# இன்றைய நிகழ்ச்சிகள்

**வெள்ளிக்கிழமை, 31 மார்ச் 2023**

தேசியக் கல்லூரி: நூலக தின விழா, வாசிப்பு ஒரு வரம் எனும் தலைப்பில் சிறப்புரை, உதவிப் பேராசிரியர் ஆர். ராஜா பங்கேற்பு, நூலகம், கல் லூரி வளாகம், காலை 11.30.

THE HINDU

Friday, March 31, 2023
TIRUCHIRAPALLI

**National College:** Library Day celebration, 11.30 a.m.

TRICHY
வெள்ளி, மார்ச் 31, 2023 | 3 | இந்து தமிழ் திசை

- நூலக நாள் விழா: தேசியக் கல்லூரி, சிறப்பு விருந்தினர்- உதவி பேராசிரியர் ஆர்.ராஜா, கல்லூரி வளாகம், முற்பகல் 11.



திருச்சி தேசியக்கல்லூரியில் நடைபெற்ற நூலகர் தின விழாவில், நூலகத்தை சிறப்பாக பயன்படுத்திய மாணவிக்கு செயலாளர் கா.ரகுநாதன் பரிசு வழங்கியபோது எடுத்தபடம்.

### திருச்சி தேசியக்கல்லூரியில் நூலக தின விழா

# நூலகத்தை சிறப்பாக பயன்படுத்திய மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள்

திருச்சி, ஏப்.3—

திருச்சி தேசியக்கல்லூரியின் நூலக தின விழா கல்லூரி நூலக அரங்கில் நடைபெற்றது. விழாவுக்கு கல்லூரி முதல்வர் முனைவர் கி.குமார் தலைமை தாங்கினார். அப்போது அவர் பேசுகையில், மாணவர்கள் நூலகத்தைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார்.

**பரிசுகள்**

நூலகத்தின் ஆண்டறிக்கையை நூலகர் முனைவர் த.சுரேஷ் குமார் வாசித்து அளித்தார். ஒவ்வொரு துறையிலும் சிறப்பாக நூலகத்தைப் பயன்படுத்திய சுமார் 50 மாணவர்களுக்குக் கல்லூரியின் செயலர் கா.ரகுநாதன் பதக்கங்களையும் பரிசுகளையும் வழக்கி கௌரவப்படுத்தினார். கல்லூரி துணை முதல்வர் முனைவர் இள வரசு வாழ்த்துரை வழங்கினார்.

இந்நிகழ்வில் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் இரா.ராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு,'வாசிப்பு ஒருவரம்' என்னும் பொருண்மையில் உரையாற்றினார். அப்போது அவர், கல்வியின் பயன் வெறும் வேலைவாய்ப்பைப் பெறுவது மட்டுமே அல்ல, ஒட்டுமொத்த மனித குலத்திற்கும் நாட்டுக்கும் உதவும் நல்ல சிந்தனைகளை உருவாக்குவதே கல்வியின் ஆகப் பெரும்பயன் என்றார்.

மேலும், தற்போது நிலவும் சூழலில் இருந்து பெருக்கிக்கொள்ளுதல், கல்வியைச் சிந்தனையாக மாற்றிக்கொள்ளும் திறமை போன்றவற்றை விளக்கினார்.

இந்நிகழ்வில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ச.ஈஸ்வரன், பிற துறைப் பேராசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் பெருந்திரளாக பங்கேற்றுப் பயன்பெற்றனர். முன்னதாக மாணவி யுவஸ்ரீ மாணவர் வரவேற்றார்.

விழா நிறைவில் மாணவர் ஹரிகிருஷ்ணன் நன்றி கூறினார். விழாவுக்கான ஏற்பாடுகளை கல்லூரி நூலகர் முனைவர் த.சுரேஷ் குமார் ஒருங்கிணைத்து செய்திருந்தார்.

# National College (Autonomous)

Nationally Re-accredited at 'A+' Grade by NAAC, College with Potential for Excellence

Tiruchirappalli

# Department of Library and Information Science

## CENTRAL LIBRARY




**Cordially invites you for the**

**Dept. Association Inauguration and Orientation**

## FOR I UG STUDENTS

**15 JULY 2023 | 3.00 Pm - 4.00 Pm**

Venue: Library Audio Visual Theatre



| PRINCIPAL | LIBRARIAN | SECRETARY |
|---|---|---|
| Dr.K.Kumar | Dr.T.Sureshkumar | Shri.K.Raghunathan |


NATIONA LLEGE (Autonomou
Department of ed Information Science
ENT IBRAR
Association r the
ation for I UG

தினமணி திருச்சி 5

சனிக்கிழமை, 15 ஜூலை 2023

## இன்றைய நிகழ்ச்சிகள்

தேசியக் கல்லூரி: நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறை, இளங்கலை மாணவர்களுக்கான சங்கம் தொடக்க விழா, கல்லூரி வளாகம், மாலை 4.

THE HINDU
Saturday, July 15, 2023
TIRUCHIRAPALLI

## TIRUCHI TODAY

### GENERAL

**National College Central Library:** Inauguration of Department Association, 3 p.m.
**Santhanam Vidyalaya Senior Secondary School:** Science through stories – story telling session by Usha Venkataraman, president, founder, Mumbai Storytellers Society, 10 a.m.
**M.A.M.School of Engineering:** Bharat Ratna APJ Abdul Kalam Award ceremony, M.Pradeep Kumar, Collector, chief guest, 9.45 a.m.
**Campion Anglo Indian Higher Secondary School:** Annual sports meet, 2.30 p.m.
**Sharon:** Kamarajar birth anniversary – Education Development Day, Aided Middle School, Pallakadu, 10 a.m.; Muthuraja Aided Middle School, Adavathur, 11.30 a.m.; Panchayat Middle School, Kallakudi, 3 p.m.
**St.Joseph's Institute of Management:** Investiture ceremony of Student Advisory Council, noon.

தினமணி திருச்சி 3

ஞாயிற்றுக்கிழமை, 16 ஜூலை

# கல்லூரி மாணவர்களுக்கு நூலக புத்தாக்கப் பயிற்சி



திருச்சி தேசியக் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற நூலக புத்தாக்கப் பயிற்சி வகுப்பில் மாணவர்களுக்கு விளக்கம் அளித்த முனைவர் த. சுரேஷ்குமார்.

**திருச்சி, ஜூலை 15:** தேசியக் கல்லூரி மாணவர்களுக்கு நூலக புத்தாக்கப் பயிற்சி வகுப்பு சனிக்கிழமை நடைபெற்றது.

இக்கல்லூரியில்புதிதாகசேர்ந்த இளங்கலை மாணவர்களுக்கான பயிற்சி முகாமை தொடக்கி வைத்து, கல்லூரிச் செயலர் கா.ரகுநாதன், மாணவர்களுக்கு பார்கோடு வசதியுடன் கூடிய அடையாள அட்டை, நூலகத்தில் பயன்படுத்தும் அடையாள அட்டை ஆகியவற்றை வழங்கினார்.

விழாவுக்கு கல்லூரி முதல்வர் கா. குமார் தலைமை வகித்தார். நூலகர் முனைவர் த. சுரேஷ்குமார், நூலக விதிமுறைகள், இ-புத்தகங்கள், இ- நாளிதழ்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், இதர புத்தகங்கள், பயிற்சி கையேடுகளை மாணவர்கள் அவரவர் கைப்பேசியிலேயே பெற்றுக் கொள்ளும் வழிமுறைகள் குறித்தும், நவீன கணினிமயமாக்கப்பட்ட கல்லூரி நூலகத்தின் செயல்பாடுகள் குறித்தும் விளக்கமளித்தார்.

நூலகத்தில் உள்ள கற்றல் வளங்கள் முழுவதையும் இளங்கலை மாணவர்களும், ஆராய்ச்சி மாணவர்களும் எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பது குறித்து செயல்முறை விளக்கம் அளித்தார்.

கல்லூரியின் துணை முதல்வர்கள் பிரசன்ன பாலாஜி, இளவரசு, நூலக தட்டச்சு பயிற்றுநர் அன்புமணி, துணை நூலகர் ராதா ஜெயலட்சுமி, நூலக அலுவலர்கள் லட்சுமணன், கலியமூர்த்தி, உமா மகேஸ்வரி, ஹரிஹரன் உள்ளிட்டோர் பங்கேற்று நூலகத்தின் சிறப்புகள் குறித்து விளக்கி கூறினர். இந்த பயிற்சியில் இளங்கலை மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

தினமலர் | திருச்சி | 18.7.2023 | 3

# நூலக பயிற்சி பட்டறை

**திருச்சி, ஜூலை 18 –**

திருச்சி தேசியக்கல்லூரியில் இளநிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான ஒரு நாள் நூலக பயிற்சி பட்டறை கல்லூரி வளாகத்தில் நடந்தது. கல்லூரி முதல்வர் குமார் தலைமை வகித்தார். செயலாளர் ரகுநாதன், ஆர்எப்ஐடி மற்றும் பார்கோடுடன் கூடிய கல்லூரி மற்றும் நூலக அடையாள அட்டைகளை மாணவர்களுக்கு வழங்கினார்.

கல்லூரி நூலகர் சுரேஷ்குமார், நூலக விதிமுறைகள் மற்றும் நூலக நவீனத்துவம் குறித்தும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நூலக வளங்களை எவ்வாறு செல்போன் மூலம் பெறுவது குறித்தும் விளக்க உரையாற்றினார். கல்லூரி துணை முதல்வர் பிரசன்னபாலாஜி, இளவரசு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை கல்லூரி நூலக அலுவலர்கள் லட்சுமணன், கலியமூர்த்தி, உமா மகேஸ்வரி, ஹரிஹரன் செய்திருந்தனர். கல்லூரி நூலக தட்டச்சு பயிற்றுனர் அன்புமணி வரவேற்றார். துணை நூலகர் ராதா ஜெயலட்சுமி நன்றி கூறினார்.